NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2016

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 5 pages. Please check that your paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions.
4. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

IEB Copyright © 2016

## SECTION A

## QUESTION 1 பகுதி ஒன்று :

கீழ்வரும் ஐந்து தலைப்புகளில் ஏதெனும் ஒன்றைப் பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை **எழுதுக.**

1.1 நான் பார்த்த ஒரு நல்ல தமிழ்ப்படம்
1.2 நிறங்கள்
1.3 கடற்கரையில் ஒரு நாள்
1.4 என் பள்ளியின் முன் ஒரு விபத்து
1.5 தண்ணீரின் மதிப்பு

**30 marks**

IEB Copyright © 2016

## SECTION B

## QUESTION 2 பகுதி இரண்டு

கொடுக்கப் பட்டுள்ளா நான்கு தலைப்புகளில் ஏதேனும் மூன்றுக்கு மட்டும் விடை தருக.

Choose any 3 questions.

2.1 கடிதம்: உன் புதியப்பள்ளியைப்பற்றி உன் தோழன் / தோழிக்கு கடிதம் எழுதுக. (10)

2.2 விளம்பரம்: நீ வேலைச் செய்யும் பரிசு கடைக்கு ஒரு விளம்பரம் தயாரிக்கவும. நான்கு பரிசுகளின் பெயர்களை தருக. (10)

2.3 SMS: எச் எம் எச்: வரிசையாக எழுதுக: என் விடுமுறை நன்றாக இருந்த்து. வணக்கம் நண்பா. நீ என்னை அவசரமாக வந்து பார்க்கவேண்டும். நான் திரும்பி மூன்று நாற்கள் ஆயின. நன்றி வணக்கம். (10)

2.4 சுருக்கி எழுதுக.

அந்தச் சமயத்தில் விக்கிரமாதித்தனும் பட்டியும் மூன்றாம் கட்டைக் கடந்து நான்காம் வாசலுக்குச் சென்றார்கள். வேதாளமும் அவர்களுடன் சென்றது. அங்கு ஒரு கருங்குரங்கு இருந்தது. பட்டி பத்திரப்படுத்தி வைத்திருந்த வேகாத சோற்றைக் கருங்குரங்கிற்கு முன் வைத்தான். அந்தச் சோற்றை அது உண்ணவில்லை. அது உண்மையான குரங்கு அல்ல என்பதையும் வெறும் பொம்மை என்பதையும் அறிந்து, வேதாளத்தைக் கொண்டு அதை அடித்து நொறுக்கினார்கள்.

(பேராசிரியர் வி. கணபதி)

(10)

**30 marks**

## SECTION C

## QUESTION 3 பகுதி மூன்று

கீழ்வரும் பகுதியைப் படித்து, பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக:

மேலே இருந்தவன் கீழே சிமெண்ட் கலவையைக் கேட்டான். 'பாண்டு' எனப்படும் இரும்புச் சட்டியில் சிமெண்ட் கலவை கொட்டப்பட்டது. அது கயிற்றின் வழியாக மேலே ஏறியது. அடுத்த நடைக்காக, தலையில் சிமெண்ட் கலவையுடன் கீழே காத்துக் கொண்டிருந்தாள் ஒரு சித்தாள். திடீரென்று மேலே இருந்தவன் கூச்சல் போட்டான். ''கயிறு அறுந்து போச்சி'' என்று கத்தினான். கண்மூடி கண் திறப்பதற்குள், அந்தப் 'பாண்டு' கீழே நின்றுகொண்டிருந்த சிற்றாளின் தலைமேல் விழுந்தது; அவள் தலை மேலிருந்த பாண்டுடன் மோதியது. அவள் மயங்கி விழுந்தாள்.

**(தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம்: பேராசிரியர் வி. கணபதி)**

3.1 பெயர்ச்சொல் எத்தனை வகைப்படம் (1)

3.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு பெயர்ச்சொற்கள் தருக (4)

3.3 மேற்காணும் பகுதியிலிருருந்து இரண்டு வினைச்சொகன் தருக (2)

3.4 ஒருமைக்கு பன்மை எழதுக:

உம் : வீடு : வீடுகள்

3.4.1 நான் (1)
3.4.2 பசு (1)
3.4.3 தலை (1)
3.4.4 மரம் (1)
3.4.5 பூ (1)
3.4.6 சிங்கம் (1)

3.5 ஆண்பாலுக்கு பெண்பால் அமைக்கவும்:

3.5.1 பாடகன் (1)
3.5.2 செல்வன் (1)
3.5.3 மகன் (1)
3.5.4 சிற்றப்பா (1)
3.5.5 அழகன் (1)

IEB Copyright © 2016

3.6 சேர்த்து **எழுதுக:**

உம் : அதை + செய் = அதைச்செய்

3.6.1 பச்சை + கிளி (1)
3.6.2 முக்கிய + செய்தி (1)
3.6.3 புகை + இலை (1)
3.6.4 கண்டு + பிடித்தான் (1)
3.6.5 புளிய + மரம் (1)

3.7 பிரித்து **எழுதுக:**

உம் : எதிர்ச்சொல் = எதிர் + சொல்

3.7.1 பெயர்ச்சொல் (1)
3.7.2 பலாக்காய் (1)
3.7.3 இரண்டாயிரம் (1)
3.7.4 இ ரும்புப்பெட்டி (1)
3.7.5 கிளிச்சிறை (1)

3.8 எதிர்ச்சொல் தருக:

உம் பகல் : இரவு

3.8.1 சிறிய (1)
3.8.2 சிரி (1)
3.8.3 முன் (1)
3.8.4 உண்டு (1)

3.9 எச்சொல் பொருத்த மானது அல்ல
3.9.1 ஒன்று ஒட்டகம் பல்லி ஒண்டு (1)
3.9.2 சிவப்பு மஞ்சல் ஏணி பச்சை (1)
3.9.3 ஆடு மான் யானை பாம்பு (1)
3.9.4 கை பேனா கால் தலை (1)

3.10 எதிர்காலத்தில் **எழுதுக:**

உம் : அவன் வந்தான்

அவன் வருவான்

3.10.1 அவன் ஓடினான் (1)
3.10.2 நீ எங்கே போனாய் (1)
3.10.3 நான் அழுதேன் (1)
3.10.4 தாத்தா நடந்தார் (1)

**40 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2016